# மின் அளவி தொடர்பாக நீங்கள் அறிய வேண்டியவை



### மின் நுகர்வோர்க்கான சி.ஏ.ஜி யின் பிற வெளியீடுகள்

* மின் பட்டியலிடல் தொடர்பாக நீங்கள் அறிய வேண்டியவை
* உங்கள் இணைப்பில் மாற்றங்களை ஏற்படுத்தல்
* புதிய மின் இணைப்பு பெறுவதற்கான வழிமுறைகள்
* தரமான சேவையும் மற்றும் குறைதீர் முறைகளும்


CAG

Citizen consumer and civic Action Group

New #246 (Old #277B), TTK Road (J.J. Road ),

Alwarpet, Chennai 600 018 INDIA

Ph:044-24994458 / 24660387

**மின் அளவி தொடர்பாக மக்கள் அறிந்துக் கொள்ள வேண்டிய தகவல்களை இந்த கையேடு அளிக்கின்றது. அதாவது, மின் அளவியை பொருத்தும் இடத்தைத் தேர்ந்தெடுத்தல் முதல், மின் அளவியில் ஏற்படும் குறைகளை சரி செய்தல் போன்ற தகவல்களை அளிக்கின்றது. இத்தகவல்கள் மூலம் நுகர்வோர் விழிப்புணர்வை அதிகரிப்பதே இக்கையேட்டின் நோக்கமாகும்.**

### 1. மின் அளவி என்றால் என்ன?

வழங்கப்படும் மின் சக்தியை அளவிட்டு நம் இடத்தில் பதிவு செய்பவை மின் அளவிகள்.

### 2. மின் அளவி உரிமையாளர் யார்?

அ. நுகர்வோரின் மீட்டர்கள் வழக்கமாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு சொந்தமானது

ஆ. நுகர்வோரே சொந்தமாக மின் அளவியை வாங்கலாம். அது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தினால் பரிசோதிக்கப்பட்டு நிறுவி முத்திரையிடப்படும்.

### 3. மின் அளவி நிறுவப்படும் இடம் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறது?

- மின் அளவி நிறுவப்படும் இடம் உங்கள் இடத்தில் நிறுவ, பரிசோதிக்க, செயல்படுத்த, அளவிட, பதிவு செய்ய, பராமரிக்க சுலபமாக அடையக்கூடிய இடமாக இருக்க வேண்டும்.
- உங்கள் வீட்டில் யாரும் இல்லாத சமயங்களிலும் மின் பயனீட்டு அளவை பதிவு செய்ய இயல வேண்டும்.
- பல மாடி கட்டிடங்களில், எத்தனை மாடிகள் இருப்பினும் மின் அளவி மற்றும் அதற்கான அமைப்புகள் கீழ்தளத்தில் தான் இருக்க வேண்டும்.

### 4. மின் அளவி எவ்வாறு அளவெடுக்கப்படுகிறது?

- வழக்கமாக மின் அளவியில் அளவு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழக ஊழியர்களால் எடுக்கப்படுகிறது. அளவெடுக்க வருபவர்களுக்கு நியாயமான சமயங்களில் நம் இருப்பிடத்தில் அனுமதி கொடுத்து உதவ வேண்டும்.
- மின் அளவியில் பதிவாகி உள்ள அளவு, மின் பயன்பாடு மற்றும் செலுத்த வேண்டிய கட்டணங்கள் நுகர்வோரின் மின் அளவியுடன் இணைக்கப்பட்ட பயனீட்டு கட்டண அட்டையில் பதிவு செய்யப்படும்.
- மின் பயனீட்டு கட்டண அட்டை நம் ஆய்வுக்கு உட்பட்டது. எண்கள் சரியாக குறிக்கப்பட்டு அளவு சரியாக பதிவு செய்யப்படுகின்றனவா என்பதை உறுதி செய்ய வேண்டும்.

**குறிப்பு: மின் அளவியின் பதிவான எண்ணில் கடைசி இலக்கத்தின் எண் 5க்கு குறைவாக இருந்தால், முந்தைய 10 எண்ணுக்கு குறைக்கப்படும். கடைசி இலக்கத்தின் எண் 5க்கு மேற்பட்டிருந்தால் அடுத்த 10 எண்ணுக்கு சரி கட்டப்படும்.**

5. மின் அளவி அளவெடுக்க அதனை அடைய முடியாதிருந்தால் என்ன நிகழும்?

மின் அளவியை அடைய முடியவில்லையெனில்

தற்காலிகமாக முந்தைய அளவீட்டின் அடிப்படையில் கணக்கிடப்படும் அளவீட்டின் சீட்டை ஊழியர் கொடுத்து செல்வார்.

சீட்டு பெறப்படும்

சீட்டில் உள்ள கட்டணத்தை செலுத்தவும்

சீட்டு இல்லாவிட்டால்

பிரிவு அலுவலரை தொடர்பு கொள்ளவும்.

முதல் முறை

முந்தைய இருமாதங்களுக்கு கணக்கிட்டு ஏற்கனவே கடந்த முறை செலுத்திய தொகையை கழித்து மீதமுள்ள தொகையை செலுத்த வேண்டும்.

இரண்டாவது முறை

மின் அளவியை அடைய இயலவில்லை. 48 மணி நேர அறிவிப்பு காலம் வழங்கப்பட்டு அதில் குறிப்பிட்டுள்ள நாள் மற்றும் மணிக்கு மின் அளவியை கணக்கிட வசதி செய்ய வேண்டும்.

அதற்கு உட்பட்டால்: இரு அளவீடு காலங்களில் மொத்த பயனீடும் கணக்கிடப்பட்டு முதல் முறை மின் அளவியை அடையமுடியாதபோது கணக்கிடப்பட்டு தற்காலிகமாக செலுத்திய கட்டணத்தை குறைத்து மீதமுள்ள கட்டணத்தை செலுத்த வேண்டியிருக்கும்.

இதற்கு உட்பட வில்லையெனில் மின் வழங்கல் நிறுத்தப்படும். முந்தைய முறைபோலவே தற்காலிகமாக கட்டணம் குறிக்கப்படும்.

### 6. சோதனைகள் யாரால் மேற்கொள்ளப்படும்?

சச்சரவுக்குள்ளான மின் அளவியை NABL எனப்படும் பரிசோதனை மற்றும் அளவை இடும் சோதனை சாலைகளை அங்கீகரிக்கும் தேசிய வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட வெளி பரிசோதனை சாலைகளில் பரிசோதிக்க வேண்டும்.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இதுவரை எந்தவொரு வெளி பரிசோதனை சாலைகளுடனும் ஏற்பாடு செய்து கொள்ளாததால், தற்போது சோதனைகள் தமிழ்நாடு அரசின் முதன்மை மின் ஆய்வாளரால் மேற்கொள்ளப்படுகின்றன.

### 7. வேறு என்ன கட்டணங்கள் பொருந்தும்?

மின் அளவிக்கான எச்சரிக்கை வைப்புநிதி கீழ்கண்டுள்ளபடி செலுத்த வேண்டும்:

ஒரு முனை - ரூ.700 மின் அளவி ஒன்றுக்கு

மும்முனை - ரூ.2500 மின் அளவி ஒன்றுக்கு

தாழ் அழுத்த வேளாண் மற்றும் குடிசை மின் இணைப்புகளுக்கு இந்த வைப்பு நிதியிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

மின் இணைப்பு ஒப்பந்தம் ரத்து செய்யப்படும் போது இந்த வைப்பு நிதி திருப்பி அளிக்கப்பட வேண்டும்.



8. மின் அளவியில் பிரச்சனை ஏதேனும் இருப்பின் என்ன செய்ய வேண்டும்?

1. முந்தைய மாதங்கள் அல்லது காலங்களின் பயனீட்டு அளவுடன் ஒப்பிடும் போது நுகர்வு மாதிரியில் பெரிதளவு மாற்றம் இருந்தால் அல்லது மின்அளவியில் ஏதேனும் பழுது நேர்ந்தால், அருகிலுள்ள உதவி பொறியாளரை தொடர்பு கொள்ள வேண்டும்.

2. உங்களுடைய எழுத்து பூர்வமான புகாரை பெற்றவுடன், அப்பொறியாளர் உங்கள் மின் அளவியை சோதனைக்கு உட்படுத்த வேண்டும்.

3. உரிய சட்டங்களின் படி அனுமதிக்கப்பட்ட அளவில் மட்டும் மின் அளவியின் பதிவில் பிழையிருந்தால், சோதனைக்கான கட்டணத்தை நீங்கள் செலுத்த வேண்டியிருக்கும். இல்லையெனில், சோதனைக்கான கட்டணத்தை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஏற்றுக் கொள்ளும்.

4. நுகர்வோர் மின் அளவி கூடுதலாக பதிவு செய்கிறது என்று புகார் செய்து அதனை அங்கீகரிக்கப்பட்ட சோதனை கூடத்தில் பரிசோதிக்க வேண்டும் என்று விரும்பினால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் நுகர்வோரின் இடத்திலுள்ள மின் அளவியை கழட்டி அங்கீகரிக்கப்பட்ட சோதனை கூடத்தில் கொடுத்து சோதனை செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

5. பழுதடைந்த மின் அளவிகள் 30 நாட்களுக்குள் மாற்றப்படும். மின் அளவி பழுதடைந்தது சோதனையில் தெரிய வந்தால், முந்தைய காலத்திற்கான பட்டியல்களை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் பிழைதிருத்தி, ஏதேனும் கூடுதல் கட்டணம் செலுத்தப்பட்டிருந்தால் வரும்கால பட்டியல்களில் அதனை சரி கட்டும்.

ஆதாரம்: பகுதி எண் 7, தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு

9. **மின் அளவி மாற்றுவதற்கு யார் கட்டணம் செலுத்த வேண்டும்?**

- தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சொந்தமான மின் அளவிகள் பழுதடைந்தால் அது தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் செலவிலேயே மாற்றி அமைக்கப்பட வேண்டும்.
- எரிந்து போன மின் அளவியை மாற்றுவதற்கான செலவை, எரிந்தது நுகர்வோரின் தவறு இல்லாத பட்சத்தில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் ஏற்றுக் கொள்ளும்.
- மின் அளவி உங்களுடைய இருப்பிடத்தில் இருந்தால் அதை பாதுகாப்பாக வைப்பது உங்கள் பொறுப்பு. மின் அளவி சேதமடைந்திருந்தாலோ அல்லது மின் அளவியின் பாதுகாப்பு முத்திரை சேதமடைந்திருந்தாலோ, மாற்றுவதற்கான செலவை நீங்கள் தான் ஏற்க வேண்டும்.
- மின் அளவி உங்களுக்கு சொந்தமானதாக இருந்து அது பழுதோ அல்லது சேதமோ அடைந்திருந்தால், தொடர்ந்து உங்களுக்கு சொந்தமான மின் அளவியையே பயன்படுத்த விரும்பினால், மின் அளவியை மாற்றுவது உங்கள் பொறுப்பாகும். அப்படி இல்லையெனில், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின் அளவியை மாற்றி, வாடகைக்கு அளிப்பதற்கான ஒப்பந்தம் இட்டு, அதற்கான வாடகையை வசூலிக்கும்.



**10. மின்னளவி அட்டை தொலைந்து விட்டாலோ அல்லது சேதமுற்றாலோ நுகர்வோரிடமிருந்து வசூலிக்க கூடிய மின்னளவி அட்டை பதிலீட்டுக் கட்டணம் எவ்வளவு?**

மின்னளவி அட்டை தொலைந்து விட்டாலோ அல்லது சேதமுற்றாலோ நுகர்வோரின் மின்னளவி அட்டையை பதிலீடு செய்ய அனைத்து வகை நுகர்வோரிடமிருந்தும் தற்போது கட்டணம் ரூ.5/- மட்டும் வசூலிக்கப்படுகிறது.

**11. மின்னளவி அட்டையிலுள்ள கட்டங்கள் முழுமையாகப் பூர்த்தி ஆகிவிட்டால், புதிய மின்னளவி அட்டை எவ்வாறு வழங்கப்படுகிறது?**

இலவசமாக வழங்கப்படுகிறது.

**12. தாழ் அழுத்த மின்னிணைப்பு உடைய நுகர்வோரின் மின்னளவி அட்டையில் குறிக்கப்பட வேண்டிய விவரங்கள் யாது?**


உரிமம்தாரர் மின்னளவு எடுத்த பிறகு, மின்னளவுகளின் விவரங்களும் (Particulars of Meter readings) ஆற்றல் நுகர்வும் (Energy consumption) மற்றும் செலுத்த வேண்டிய கட்டணம் (Charges Payable) போன்ற விவரங்களை மின்னளவி அட்டையில் குறிக்கப்பட வேண்டும்.

**13. மின்னிணைப்பு தந்தவுடனே தாழ் அழுத்த மின்னிணைப்புகளில் பொருத்தப்பட்ட மின்னளவி பழுதுற்றால் மின்னளவு மதிப்பீடு எவ்வாறு செய்யப்படுகிறது?**

a. சரியான மின்னளவி பொருத்திய பின் உள்ள நான்கு மாதங்களில் வழங்கப்பட்ட மின்சார அளவின் சராசரி அடிப்படையில் அத்தகைய மின்சாரப் பயன்பாட்டுத் தன்மை மாறுபடாத வரையில் பழுதுற்ற காலத்தில் வழங்கப்பட்ட மின்சார அளவைக் கணிக்க வேண்டும்.

b. மின்னளவி பழுதான காலத்திற்கு, மாதக் குறைந்தபட்ச கட்டணத்தை நுகர்வோரிடமிருந்து வசூலிக்க வேண்டும்.

c. மதிப்பீட்டிற்குப் பிறகு தற்காலிகமாக வசூலிக்கப்பட்ட கட்டணத்தை நேர் செய்த பின்பு மீதமுள்ள கட்டணம் வசூலிக்கப்படும்.



குறிப்பு விவர பட்டியல் :

1. தமிழ்நாடு மின்சார பகிர்மான செந்தரங்களுக்கான ஒழுங்கு முறை விதிகள் (www.tnerc.gov.in)

2. மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றம் மற்றும் மின்சார குறை தீர்ப்பாளருக்கான ஒழுங்கு முறை விதிகள் (www.tnerc.gov.in)

3. தமிழ்நாடு மின்சார வழங்கல் விதித்தொகுப்பு (www.tnerc.gov.in)

4. தமிழ்நாடு மின்சார பகிர்மான விதித்தொகுப்பு (www.tnerc.gov.in)

5. மின்சார சட்டம் 2003 (www.cercind.gov.in)

6. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் இணையதளம் (www.tangedco.gov.in)

## மின் நுகர்வோர் மையங்கள் :

**Madras Metropolitan Consumer Rights Protection Centre (MMCRPC)**
No. 118, Fourth Street,
Kamaraj Nagar, Avadi,
Tiruvallur District.
Chennai - 600 071,
Phone: 044-26554434
Mobile: 9382828286 / 9486882626
Email: ecctiruvallur@gmail.com

**Tirunelveli District Consumer Rights Protection Sangam**
No. 9, Kulapirai Street,
Tirunelveli Town,
Tirunelveli - 627 006
Phone: 0462 2338544
Mobile: 94879 83160
Email: ecctirunelveli@gmail.com

**Southern Consumers Organisation for Protection & Empowerment - (SCOPE)**
No. 49, Raja Street, FCI Nagar,
Semmandalam,
Cuddalore - 607 001
Phone: 04142-233798
Mobile: 9443285555
Email: ecccuddalore@gmail.com

An initiative supported by

SHAKTI
SUSTAINABLE ENERGY FOUNDATION